தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 23, திருவள்ளுவர் ஆண்டு–2050

2019 ஜுலை 8, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.”

செய்வதற்கு முடியாத கடினமான செயல்களையும், செய்யும் முறை அறிந்து திறம்படச் செய்து முடிக்கின்ற திறமை உள்ளவரே, பெருமை உடையவர் ஆவார்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

துணை மின் நிலையம்

***38495—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கம்பூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2019 ஜூலை 8

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கம்பூர் ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு சானிப்பட்டி என்ற இடத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், அதில் சில சிக்கல்கள் இருந்ததன் காரணமாக அந்த இடத்தை மாற்றி, வேறு இடம் தேர்வு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். வேறு இடம் தேர்வு செய்தவுடன் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலூர் தொகுதியில் நரசிங்கம்பட்டி, மேலவளவு, திருவாதவூர், அ. வள்ளாலபட்டி ஆகிய கிராமங்களுக்கு துணை மின் நிலையங்களை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், தொகுதி மக்களின் சார்பாக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கம்பூர் ஊராட்சி, கேசம்பட்டி ஊராட்சி, சேக்கியபட்டி ஊராட்சி, குன்னாரம்பட்டி ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு திண்டுக்கல் மாவட்டம், நத்தத்திலிருந்து மின்சாரம் வந்து கொண்டிருக்கின்றது. இங்கே மின் பற்றாக்குறை இருப்பதால், கம்பூர் ஊராட்சியில் ஒரு துணை மின்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2019 ஜூலை 8]

நிலையம் அமைத்துத்தர அம்மாவின் அரசு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நத்தம் பகுதியில் உள்ள துணை மின் நிலையத்திலிருந்துதான் மின்சாரம் வந்து கொண்டிருக்கின்றது. அங்கு இரண்டு 10 MVA இருக்கின்ற காரணத்தினால், மின் பளு அதிகமாக உள்ளதால், ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இடம் தேர்வு செய்யப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட அந்த இடம் சரியான இடமாக இல்லாததால் மாற்று இடத்தைத் தேர்வு செய்யச் சொல்லியிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஏதாவது மாற்று இடம் உடனடியாக ஏற்பாடு செய்து கொடுத்தார் என்று சொன்னால், மின் பளுவைக் குறைப்பதற்காக உடனடியாக துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 27 ஊராட்சிகள் உள்ளன. கொட்டாம்பட்டியில் ஒரு துணை மின் நிலையம் மட்டுமே உள்ளது. வறட்சியின் காரணமாக கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 800 அடிக்கு மேல்* borewell *போட வேண்டியுள்ளது. மின் பற்றாக்குறை காரணமாக குடி தண்ணீர் மோட்டார் இயக்குவதற்குக்கூட சிரமமாக உள்ளது. ஆதலால், கம்பூர் ஊராட்சிக்கு அருகில் உள்ள சேக்கியபட்டி ஊராட்சியில் போதிய இட வசதி உள்ளதால், சேக்கியபட்டி ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறும், மேலும், பொட்டப்பட்டி ஊராட்சி, தும்பைபட்டி ஊராட்சி மற்றும் மேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் கிடாரிப்பட்டி, வெள்ளலூர், உறங்கான்பட்டி ஆகிய பகுதிகளிலும் துணை மின் நிலையங்களை*

அமைத்துத் தருமாறும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனைத்து ஊராட்சிகளிலும் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். ஒவ்வோர் ஊராட்சிக்கும் துணை மின் நிலையம் அமைத்துத்தர முடியாது. மின் பளு எந்த அளவிற்கு இருக்கின்றதோ அந்த அடிப்படையில்தான் புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். நான் இன்றைய தினமே அந்தத் துறையின் அதிகாரிகளைத் தொடர்புகொள்ளச் சொல்கின்றேன். அந்த இடத்தைத் தேர்வு செய்து கொடுப்பீர்களென்று சொன்னால், உடனடியாக அந்த இடத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும். நீங்கள் சொல்லியிருக்கின்ற மற்ற ஊராட்சிப் பகுதிகளில், ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால், அங்கு மின் பளு குறைவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அதற்குப்பிறகும் அங்கு மின் பளு அதிகமாக இருக்கும் என்று சொன்னால், ஆய்வு செய்து அதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதி, புள்ளம்பாடி ஒன்றியம், கல்லகம் ஊராட்சியின் சாலையோரத்திலேயே ஊராட்சிக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் உள்ளது. கல்லகம் ஊராட்சிக்கு, கல்லக்குடி துணை மின் நிலையத்திலிருந்தும், அருகிலிருக்கும் பூவாளூர் துணை மின் நிலையத்திலிருந்தும் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அந்தப் பகுதி முழுவதும் விவசாயிகள் நிறைந்த

2019 ஜூலை 8]

பகுதியாகும். 3 HP உபயோகப்படுத்திய விவசாயிகள் அனைவரும் தற்போது 10 HP உபயோகப்படுத்த வேண்டிய சூழ்நிலை நிலவுவதால், அந்தப் பகுதியில் மின் விநியோகம் அதிகமாகத் தேவைப்படுகிறது. எனவே, கல்லகம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், துணை மின் நிலையம் அமைக்கக் கோரிய கல்லகம் ஊராட்சிக்கு கல்லக்குடி துணை மின் நிலையத்திலிருந்தும், பூவாளூர் துணை மின் நிலையத்திலிருந்தும் மின் விநியோகம் செய்யப்பட்டு வருவதால், மின்னழுத்தம் குறைவாக இருப்பதாக இங்கே தெரிவித்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, 3 HP உபயோகப்படுத்திய விவசாயிகள் தற்போது 10 HP அளவுக்கு உபயோகப்படுத்துவதால் மின் பளு அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். விவசாயிகளிடம் உள்ள பிரச்சினையே இதுதான். விவசாயிகள் மின்சார வாரியத்தில் அனுமதி வாங்குவது 3 HP–க்குத்தான். ஆனால், அனுமதியில்லாமல் 10 HP அளவுக்கு மின் load–ஐ அதிகமாக உபயோகப்படுத்துகின்ற காரணத்தினால்தான், பளு அதிகமாகும்போது மின்னழுத்தம் குறைகின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் இடத்தை இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார். அது ஊராட்சிக்குச் சொந்தமான இடம் என்றும் இங்கே தெரிவித்துள்ளார். அது ஊராட்சிக்குச் சொந்தமான இடமாக இருக்கின்றபட்சத்தில் அதுகுறித்து ஆய்வு செய்யப்படும். அரசுவரை கோப்புகள் வரவேண்டியுள்ளதால், சிறிது காலதாமதம் ஏற்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாருக்குச் சொந்தமான இடத்தைக் கண்டறிந்து கொடுப்பார்களேயானால் negotiation–ல் நாம் இடத்தை வாங்கிக்கொள்ளலாம். எளிதாக அந்தப் பணிகள் முடிவதற்கு வாய்ப்பாக இருக்கும். இல்லையென்றால், அரசுக்குக் கோப்பு அனுப்பப்பட்டு அனுமதி பெறுவதற்கு கிட்டத்தட்ட ஒரு வருட காலம் ஆகிவிடும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆய்வு செய்து தனியாருக்குச் சொந்தமான நிலத்தைக் கண்டறிந்து கொடுப்பார்களேயானால் அதுகுறித்து மாண்புமிகு

அம்மா அவர்களுடைய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 174–வது வட்டத்தில் காமராஜர்புரம், நேரு நகர் போன்ற பல்வேறு பகுதிகளில் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் overhead lines ஆகச் செல்லக்கூடிய உயரழுத்த மின் கம்பிகளை தரையில் புதைத்திட வேண்டுமென்கின்ற கோரிக்கை, கேள்வியின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு விடுக்கப்பட்டது. ஓரிரு இடங்களில் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இன்னும், நேரு நகர், 1,500 குடியிருப்புகளைக் கொண்ட மகாலட்சுமி அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளிலெல்லாம் உயரழுத்த மின் கம்பிகள் மேலே சென்று கொண்டிருக்கின்றன. அவற்றைப் புதைவடங்களாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சைதாப்பேட்டை பகுதியில் overhead lines ஆகச் செல்லக்கூடிய உயரழுத்த மின் கம்பிகளை புதைவடங்களாக அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் இங்கே தெரிவித்தார். நேரு நகர் மற்றும் மகாலட்சுமி அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளில் மேலே செல்கின்ற மின் கம்பிகளை புதைவடங்களாக அமைக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார். புதிதாக தற்போது tender விடப்பட்டிருக்கின்றது. சென்னை மாநகரம் முழுவதும், இன்னும் ஓராண்டுக் காலம், இரண்டாண்டுக் காலத்திற்குள்ளாக முழுமையாக அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில்தான் துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

2019 ஜூலை 8]

மகாலட்சுமி அடுக்குமாடிக் குடியிருப்புகளில் 1,500 வீடுகள் இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். பொதுவாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுகிறவர்கள் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் கொடுக்க மறுத்து வருகிறார்கள். 1,500 வீடுகளைக் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் ஒதுக்கியிருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. பொதுவாக சென்னை மாநகரத்தில், அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுகிறவர்கள் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் ஒதுக்க வேண்டுமென்று விதி இருந்தாலும்கூட, அவர்கள் அதை முழுமையாகக் கொடுக்காத காரணத்தால்தான் இதுபோன்ற சிரமங்கள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற இடத்தில் துணை மின் நிலையம் அமைக்க இடமிருந்து துணை மின் நிலையம் அமைக்கப்பட்டால் அங்கே மின் பளு குறைவதற்கு வாய்ப்பாக இருக்கும். மேலும், புதைவடங்கள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பணிகள் phased manner *ஆக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

மீன் பதனிடும் பூங்கா

***25195—திரு. கே.பி.பி. சாமி:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியில் மீன் பதனிடும் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?